**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.91** **நாள்: 24.06.2016**

## பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் அம்மா குடிநீர் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் அம்மா குடிநீர் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தற்போது சராசரியாக ஒவ்வொரு இடத்திலும் 10090 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதிகபட்சமாக மண்டலம்–10, வார்டு–131, சிவன் பூங்காவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையத்தில் நாளொன்றுக்கு 19480 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இதுவரை (28.02.2016 முதல் 20.06.2016 வரை) 6.41 இலட்சம் ஏழை, எளிய குடும்பங்கள் 128.27 இலட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பெற்று பயன்பெற்றுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் பயன்பெறும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இலவசமாக வழங்கும் வகையில் 13.02.2016 அன்று அம்மா குடிநீர் திட்டத்தை அறிவித்தார்கள்.

ஒரு குடும்பத்திற்கு நாள் ஒன்றிற்கு 20 லிட்டர் அளவிற்கு விலையில்லாமல் வழங்கப்படும். குடிநீர் சுத்திகரிப்பு தானியங்கி நிலையத்தில் பொதுமக்கள் குடிநீரினை பெற்றுக்கொள்ளலாம்.

முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் 20 இடங்களில் அம்மா குடிநீர் திட்டம் ஒப்பங்கள் கோரப்பட்டு 18 இடங்களில் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. ஒப்பந்ததாரர் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை நிறுவி, 5 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணியையும் மேற்கொள்ள வேண்டும். இந்த இயந்திரம் மணிக்கு 2000 லிட்டர் சுத்திகரிக்கும் திறனை கொண்டதாக இருக்கும். இதற்குரிய குடிநீர் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திலிருந்து இலவசமாக பெறப்படுகிறது.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**